ஜூன்
2002



# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


ஜீன் - 2002

மலர் 34 ❋ இதழ் 04



ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்



வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**
**P. O. BOX - 44**
**BATTICALOA. 30000**
**Tel: 065 - 22723**

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)




## உள்ளே


அன்புடன் உங்களோடு - 1
பார்புகழும் பதுவை அந்தோனி - 2
புரிந்துணர்வும் புதுப்படைப்பும் - 4
இலக்கிய மஞ்சரி - 5
விரிகோணம் - 6
நற்கருணையில் யேசுவின் ...... - 8
அந்தியின் அவதாரம் - 10
விபுலாநந்த அடிகளார் - 11
மாணவர் பக்கம் - 12
இப்படியும் மனிதர்கள் - 15
பேனா - 17
விவிலியத்தின் மேன்மையினை... - 18
கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் - 20
சமாதானம் வேண்டுமா ?... - 21
விண்ணக வாழ்வின் - 22
விவிலியம் கற்போம் - 23
அறிவை வளர்ப்போம் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

புரிந்து கொள்ளப்படவேண்டிய புரிந்துணர்வு புரிந்து கொள்ளப்படாமல் விட்டுவிடப்படுமோ என்ற அச்சங்களும், சந்தேகங்களும் மக்கள் மனங்களில் அலை மோத ஆரம்பித்துவிட்டன. சில நடவடிக்கைகளும், சில செவ்விகளும், சில மேடைப் பேச்சுகளும் மக்களின் அச்சம் நிறைந்த சந்தேகங்களுக்கு வழிகோலுகின்றன.

புரிந்துணர்வின் கால கட்டத்தில் நாட்டில் குண்டு வெடிப்புக்களில்லை, உயிர்ச்சேதங்களில்லையென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இந்நிலை தொடர்ந்து முன்னேறி நிரந்தர சமாதானம் நிலை நிறுத்தப்பட வேண்டுமென்பதே பெருந்தொகையான மக்களின் எதிர்பார்ப்பாகும். இதை இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், குறிப்பாக அரசியல் தலைவர்களும், புரிந்துணர்வில் கைச்சாத்திட்ட தரப்பினரும் உணர்ந்து தன்னால், இச் சமாதான முயற்சிக்கு பங்கம் ஏற்படக் கூடாதென்ற சிந்தனையோடு செயல்படவேண்டும்.

மனிதன், மனிதனை நம்பமுடியாத நிலையிருப்பதால் தான் சமாதானத்தில் இழுபறிகளும், தேக்க நிலைகளும் ஏற்படுகின்றன. நம்பிக்கையின்மைகள் மறைந்து நம்பகத்தன்மை ஏற்படவேண்டுமென்றால் அதற்குப் பொறுப்பானவர்கள் இதயத்தில் இறைவன் தரும் சமாதானம் தங்கவேண்டும். இது உலகம் தரும் சமாதானம் போன்றதல்ல ~ என்று இறைவார்த்தை கூறுகிறது. இறைவன் தரும் சமாதானம் ~ என்பது போரற்ற நிலையல்ல மாறாக நீதியும், சமத்துவமும், சகோதரத்துவமும் கொண்ட ஓர் அருட்கொடை. மனித சிந்தனைகளைக் கூர்ந்து இறைச் சிந்தனைகளோடு ~ செயற்பட்டால் நிரந்தர சமாதானம் ~ ஒன்றும் எட்டாக்கனியல்ல. நாடு மட்டும் குழம்பிப் போகவில்லை சில குடும்பங்களும், சில உறவுகளும் ~ இன்று குழப்ப நிலையில் தான் இருக்கின்றன. குடும்பங்களுக்கிடையில், சொந்தங்களுக்கிடையில் ஏற்பட்ட புரிந்துணராத் தன்மையே இவ்வுறவின் முறிவுகளுக்குக் காரணமாகும். இவ்வாறு மனஸ்தாபங்களுடனும், உறவின் விரிசல்களுடனும் வாழும் இதயங்களுக்கும் சமாதானம் தேவை.

இந்தச் சமாதானத்தை இறை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் ஒருவரையொருவர் மன்னித்து, ஒருவரையொருவர் ஜெபத்தில் ஒப்புக் கொடுக்க வேண்டும். இயேசுவின் திரு இருதயத்தை நினைவு கூரும் இம்மாதத்தில் சிந்தனைக்குச் சில . . .

இதயமென்பது அன்பிற்காக . . .

இதயத்தில் பகையுணர்ச்சிகளையும், வர்மங்களையும், மனஸ்தாபங்களையும் தேக்கி வைக்கக் கூடாது.

ஆசிரியர்






## இறைவாக்கு

வாழ்வுதரும் உணவு நானே
என்னிடம் வருபவருக்குப்
பசியே வராது

*யோவான் 6/35*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்புகழும் பதுவை அந்தோனி



1195 ஆவணி 15
அதிஷ்ரமான நாள்
அன்றுதான்
அவன் அவதாரம்

மாட்டின்
மரியாள்
கூட்டு இன்பத்தில்
மலர்ந்த
குழந்தை இவன்

பிரபுக்கள்
குடும்பத்தின்
பிள்ளை இவன்
உறவு இந்த
உலகத்தோடிருக்க வில்லை.

பிறந்த எட்டாம் நாளிலேயே
இந்தப் பிள்ளையிடம்
வானம்
இறங்கி வந்தது,
ஞானஸ்நானத்தால்
நனைத்தது.

ஞானம் பெற்ற
குழந்தை
இள ஞாயிறு எனப்
பொலிந்தது.

அருள் வளம்
அவனிடம்
அலைமோதியது.

இருளே அறியா
இரவியவன்

வேளை வந்தது
விண்ணகம்
ஒரு தூது
விடுத்தது.

விளங்கிக் கொண்டான்
விடலை

பதினைந்து வயதில்
கிடைத்த
பாக்கியம் இது
1210ல்
அகுஸ்தின் சபையே
அவனது அறக்கோட்ட
மானது.

தொண்டும்
தூய்மையும்
துறவியின்
இரண்டு கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக வாழ்வு
என்பதே
ஆண்டவனைத்
தரிசிப்பதற்கான
ஒரு யாத்திரைதான்

சகதிகள்
சந்தித்தன
சாமர்த்தியசாலி அவன்
சறுக்கவே இல்லை
உள்ளம் உருக்கு
உலகத்தால்
வெல்ல முடியவில்லை.

பிரான்சிஸ் என்ற
யேசு பித்தன்
தாடலை
என்ற சொல்லின்
தத்துவமாக விளங்கினான்

ஆன்மீக வெறி
அவன் கண்களில்
அலையாக வீசியது.

யேசுவிற்காக
அவன் எடுத்துக்கொண்ட
வேஷம் யாசகன்

அவர்தான்
பிரான்சிஸ் அசிசி
அந்தோனி
அவரின் அங்கம்.

நாவலன் அந்தோனி
நற்செய்தியோடு
பூவலம் செய்வான்
புதுமைகள் தொடரும்.

பிரான்ஸ் ஜேர்மனி
இங்கெல்லாம்
அவன் பிரசங்கப்
பெருமழை பெய்யும்.

தவறான கொள்கைகளின்
தளத்தில் நின்று
தத்துவம் பேசியவர்கள்

சொல்லாளன் அந்தோனிமுன்
சோர்ந்து போனார்கள்.

யேசுக்கிறிஸ்துவின்
தெய்வீகத்தை
எதிர்த்தவர்கள்

அருட் சாதனங்கள்
அர்த்தமற்றவை என
ஆர்ப்பரித்தவர்கள்
அந்தோனிமுன்
அடங்கிப் போனார்கள்.

வெற்றிமாலை
அந்தோனியில் மார்பில்
வீழ்ந்தது
சுற்றி நின்ற
பகைவர்களின் முகம்
சுருங்கியது.

உண்மையான
கிறிஸ்து வேதம்
உலகத்தின்
ஒவ்வொரு மூலைமுடுக்கிலும்
உதயசூரியனாக எழுந்தது.

**வாகரை வாணன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்துணர்வும் புதுப்படைப்பும்

செல்லத்துரை ஜெயராஜா

உன்னை நானும் என்னை நீயும் புரிந்து கொள்வதை விட நம்மை நாமே அறிந்துகொள்வது மேலானது. அறிவியலும் இதையே கூறிநிற்கிறது, 'தன்னை அறிபவன் முழு மனிதன்' என்று நம்மை நாமே புரிந்துகொள்ளும் போது, நமக்குள்ளிருக்கும் 'நான்' புலப்படுகிறது. அந்த 'நான்' பலவற்றை நமக்கு உணர்த்துகிறது, குறிப்பாக நாம் கடந்துவந்த வாழ்க்கைப் பாதையை வெளிச்சம்போட்டுக் காட்டும் போது, 'நான் யார்' என்பதை இனங்காட்டிக் கொடுத்து விடுகிறது. ஆன்மீகம் இந்தத் தெளிந்த தன்மையை புதுப்படைப்பாகுதல் என்கிறது.

நம்மை நாம் உணரும் நொடியில் நமது உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்வே வாழ்க்கை மாற்ற முமாகி விடுகிறது. அந்த உணர்வுதான், விபசாரப் பெண்ணுக்குக் கல்லெறிய முனைந்தவர்களை உறுத்தி மனம்மாறச் செய்தது. (யோவான் 8: 1 -12) தமாஸ்கு நகரத் தெருவில் சவுல் வீழ்ந்து கிடந்தபோது 'நீ துன் புறுத்தும் இயேசு நானே' என்ற குரல் கேட்டதும் தன்னை உயரச் செய்தது: அவன் இதயம் பவுலாக மாற வழிவிட்டது (திருத்துதர் பணி 9: 3 - 6) இது தன்னிலை உணர்ந்து திருந்திவிடும் மனநிலையைக் காட்டுகிறது.

திருந்தாத மனங்களும் இல்லாமல் இல்லை, வேரோடி விருட்சமாகிவிட்ட பாவநிலைதான் இதற்குக் காரணம். 'நான் நிலை வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டான் ஒரு வாலிபன் இயேசு விடம். அதற்கு அவர், 'உமது உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்' என்றார். அவன் ஏராளமான சொத்துக்களை உடையவன், தயங்கினான். பிறகு வருத்தத்தோடு போய்விட்டான் (மத் 19: 16- 22) உலக இயல்பில் இதயம் இறுக ஒட்டிக் கொண்ட நிலை இது. மற்றுமொரு நிலை, கைதுசெய்யப்பட்ட இயேசுவை விசாரிக்கிறான் காய்பா. அவருடைய கண்ணியமான தோற்றம் அவனுக்கு உண்மையை உணர்த்தினாலும், வன்மம் விடவில்லை, அலட்சியப்படுத்தியது. "நீ கடவுளின் மகனான மெசியாவா" என்று கடவுளின் மேல் ஆணையிட்டுக் கேட்டான். அதற்கு "நீரே சொல் கிறீர்" என்றார் ஆண்டவர். அந்த விநாடியில் காய்பா, சர்வலோக நாயகனான கடவுளின் முன்னால்தான் நிற்பதையும், அவருடைய நீதிக்கு முன்பாகத் தனது குற்றங்கள் வெட்ட வெளிச்சமாக்கப் படுவதையும் உணர்ந்தான். பயந்து விட்டான், அவன் மனம் குத்து ண்டது, என்றாலும் மாற்றத்துக்குப் பதிலாக மூர்க்கமே மேலோங்கிற்று. பயத்தினால் தனது ஆடைகளைக் கிழித்தான். ஆம், வெறும் பயத்தினாலேயே கிழித்தான் (மத். 26:63 - 65). இது கோழைத்தனமான உணர்வின் கிலி பிடித்த நிலை.

தன்னை அறியும்போது அங்கே நெகிழ்வுத் தன்மையும் மனதில் ஏற்பட வேண்டும். அப்போதுதான் மாற்றம் ஏற்பட இடமுண்டு, இதுவே படைப்பு. புதுப் படைப்பாகுதல் என்பது மனத்தை மட்டுமல்ல, ஆன்மா வின் அடித்தளத்தையே மாற்றும் செயற்பாடு. இதையே ஆண்டவர் இயேசு, "மறு படியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது, என்று சொன்னார். (யோவா. 3:1-3).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாகவியின் "வீடும் வெளியும்"

## இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

அண்மையில் மஹாகவியின் "வீடும் வெளியும்" என்னும் கவிதைத்தொகுப்பை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இருபத்தைந்து கவிதைகளைக் கொண்ட தொகுப்பாக இந்நூல் காணப்படுகின்றது. கல்முனை வாசகர் சங்கம் 1973ம் ஆண்டு ஜூன் மாதம் இத் தொகுப்பை வெளியிட்டுள்ளது.

மஹாகவி அவர்களின் 'கோடை' என்னும் நூல் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கட்கான (தமிழை ஒரு பாடமாகப் பயின்றவர்களுக்கு) பாடநூலாக இருந்தது. மஹாகவியவர்கள் மட்டக்களப்புக்கச்சேரியில் உத்தியோகத்தராகக்கடமைபுரிந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. 'கோடையில் உள்ள வெள்ளிப்பாதரசம்' என்னும் படைப்பு மிகவும் பிரசித்தமானது: மிகவும் உயிரோட்டமுள்ளது.

'வீடும் வெளியும்' கவிதைத்தொகுப்பு இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் கூறில் கமலி, வீடும் வெளியும், ஓநாயும் ஆட்டுக்குட்டியும், அகலிகை கண்களும் கால்களும், செத்துப் பிறந்த சிசு, இரண்டாவது திருமணம், சீமாட்டி, விட்டமுதல், படலை திறமினோ என்னும் பத்துக் கவிதைகள் காணப்படு கின்றன.

இக்கவிதை பத்திலும், பாலுறவும் அது சார்ந்த தனிமனித, சமூகப்பிரச்சினைகளின் உணர்வு நிலைகள் புதைந்து காணப்படுகின்றன. இம்முதல் கூறு 'வீடு' என்னும் தலைப்பைக் கொண்டுள்ளது.

இரண்டாம் கூறு பல்லி, ஒரு கனவு, தேரும் திங்களும், நீருழவன், வீசாதீர், தேர், திருட்டு, கண்கள் புரிந்து விட்டபாவம், நேர்மை, ஒரு தோற்றம், செல்லா க்காசு, மற்றவர்க்காய் பட்டதுயர், மீண்டும் தொடங்கும் மிடுக்கு, புள்ளி அளவில் ஒரு பூச்சி, சிறு புல் போன்ற கவிதைகள் காணப்படுகின்றன. இக்கூறிற்கு 'வெளி' என்னும் தலைப்பிடப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் முதலாம் கூறில் 'அகம்' என்னும் இலக்கிய மரபும், இரண்டாம் கூறில் 'புறம்' என்னும் இலக்கிய மரபும் உள்ளது போல் தோன்றுகின்றது.

முதலாம் கூறில் உள்ள 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' என்னும் கவிதையின் சில அடிகள்.

வற்றல் இடுப்பை வளைப்பது போல் தோன்றுகின்ற
முற்றா இளநீர் முலையுடையாள்
பற்றா
உடையாள் மிடுக்கு நடையாள் அவளோர்
இடையாள் இதவள் கதை.

இரண்டாம் கூறில் உள்ள 'நீருழவன்' என்னும் கவிதையின் சில அடிகள்

ஒட்டைக் குடிசை ஒழுக விழித்திரவில்
நாட்டைக் கடந்தான். நடுக்கடலில்
போட்ட
வலையை வலித்திருத்தான்
வந்ததோ பாசி!

நீரை உழுது மீன் தேடுவதால் "நீருழவன்". இவருடைய கவிதைகள் உரைநடைக் கவிதைகள் போல் காணப்பட்டாலும், மரபுக் கவிதை மரபையும் உள்ளடக்கிய புதுமை நடையையும் கொண்டு காணப் படுகின்றது.

மஹாகவியின் கவிதைகள்,படைப்புகள் என்பன மிக பிரபலப்படுத்த வேண்டியவை. அவை அனைவ ராலும் வாசிக்கப்பட வேண்டியவைஇன்றைய இளம் தலைமுறையை அவை சென்றடைய வேண்டும். எனவே இலக்கியக் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் இதனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

அவரின் படைப்புக்களை பத்திரிகைகளில் மீளவும் வெளியிட சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிகோணம்

அந்தி மாலை வேளை இயற்கை அன்னையின் எழில் வதனங்கள் பொங்கிப் பூரித்து விளங்கும் ரம்மியமான காட்சி களைக் கொண்ட கிராமம். பிஞ்சும் பூவுமாய் தென்றலில் அசைந் தாடும் மாங்கொப்புக்களிலே அணிற் குஞ்சுகள் ஓடிப்பிடித்து விளை யாடிக் கொண்டிருந்தன. பங்கு மனை வழியாகச் செல்லுகிறேன். நேற்றுக் கேட்ட பங்குத் தந்தை யின் குரல் இன்றும் காதில் மீள ஒலிக்கிறது.

'தம்பி தாவீது! நம்மட பங்கின் சார்பா தொடர்புதின விழாவுக்கு தரமான ஒரு றாமா கேட்டிருக்கிறாங்க. நீங்கதான் பொறுப்பா அத செய்ய வேணும்' அந்த வார்த்தைகள் மீளவும் ஒலித்த போது நான் பங்கு மனை யைத் தாண்டி அண்ணாவியார் படலையையும் தாண்டி நடந்து விட்டேன். விசுவாசத்தின் குரல் சிந்தனைக்கு ரிபன் வெட்டியது. 'ஆண்டவா... ஒனக்கு கண் ணில்லயாப்பா ஏன்தா... இந்த மாதிரி என்னச் சோதிக்கிறா... கட்டின பெண் டாட்டி பெத்த புள்ளயள் எல்லாம் பறிகொடுத்து கைமில பாதியும் இல்லாம.. காலும் ஊனமா..' நான் அனுதாபத்தோடு பார்த்தப்போ அவன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரம் தரையில் உருள... ஒட்டியுலர்ந்த வயிறு மடிந்து பரட்டையேறிய தலை முடி சிதற குப்புற விழுந்தான். வன்செயல் களின் அனர்த்தம் பற்றி கட்டுரை எழுத நினைப் போர் எங்கும் அலைய வேண்டியதில்லை. இவனை அப்படியே வடித்தால் போதும். என் கால்கள் கடந்து நடந்தன. எங்கோ ஓர் மூலையில் சில சிந்தனைக் கீற்றுகள் வருடிக் கொண்டிருப்பது போன்ற உணர்வு.

கன நாளா ஜோசப் ஐயா வீட்டுப் பக்கம் போகேல்ல... அவரது முற்றத்தில் நின்றிருந்த தெம்பி லியருகே பவ்யமாய் குந்திக் கொண் டிருந்தது பெரிய பூச்சாடி யொன்று. அருகே வர,' வரோணிக்கா நீ அப்பிடிச் சொல்ல கூடா தும்மா.... போகாத கோயி லெல்லாம் போயி நேர்த்திக் கடன் வெச்சி பெத்த ஒரே புள்ள, யாரோ ஒருத்தியோட ஓடிப் போனான் எண்டதுக்காக....' கரகரத்த அவரின் குரலை மறித்தது அந்த 'இல்ல...யில்ல அவன நான் கையிலசெபமாலயக் குடுத்து ஒண்டொ ண்டா சொல்லிக் குடுத்த செபம் அவன நாள் தவறாம பூசைக்கு கொண்டு போய்... ஏனுங்க... அவன நான்.... நான்தான் சுவாமி யாரிட்ட சொல்லி பூசைக்குதவுற கூட்டத்திலயும் சேத்து.

அப்படி... அப்படி... வளத்த புள்ள...' தலையில அடித்து வேதனை தாளாமல் விம்மியழும் அந்தத் தாயின் சோகங்கள் என் உள்ளத்தில் இடம் கேட்டன, குடியிருக்க. திரும்பினேன். 'பெத்த நம்மள விட்டிற்றுப் போனானே எண்டு நான் கவலப்படல்ல வரோ ணிக்கா. காலங்காலமாக கையெ டுத்த அந்தக் கடவுள.... சமயத் தையே கைவிட்டுட்டுப் போனானே... எண்டுதான்...' நான் நிற்கவில்லை. அந்த வேதனையின் குரல்கள் காற்றில் அள்ளுப்பட்டு மறைந்தன. மீண்டும் எனது சிந்தனையில் ஒரு மூலையில் சில நெருடல்கள். சரிப்பட்டு வராது நம்மட வசந்த மாளிகைக்கு திரும்புவம் என்ற எண்ணம் தட்ட கென்றி அண் ணரின் வீட்டயும் அன்ரனி ஆசி ரியரின் குவாட்ட ஸ்சையும் கட ந்து ஆரோக் கியசாமியரின் கடையில் றொபின் நீலம் வாங்கிக் கொண்டு போக எண்ணி நான் நிற்க, கடைய ருகே பென்சன் ஆசிரியர் ஒருவர் 'என்ன மிக்கேல் வெள்ளச் சாறனும் சேட்டுமா? வழக்கமா பழைய சாறனும் மண் வெட்டியுமா திரியுற நீ...' ஐயா.. நீங்க போகேல்லயோ... இண்டைக்கி பங்குசபக் கூட்டம் இருக் கெண்டு, ஆக்களின்ர பேரும் ஞாயிற்றுக் கிழம பூசையில சுவாமி அறிவிச் சவர் அதில உங்கட பேரும் கூட...'

'நிப்பாட்டு தம்பி, நான் வரமாட்டேன். என்ர சோலிகள் ஏராளம். அது சரி நேத்தைக்கு ஒன்ர மனிசி எங்கயோ போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாப் போல...' தலையை நிமிர்த்திப் பார்த்து மீசையை ஒருக்கா தடவிவிட்டு...' ஐயா... அந்த மனிசன் திறமாச் சாத்திரம் சொல்லுதாம். வருத்தம் வாதை யெண்டால் இளனி ஓதி, காரியங்களும்.' "ஓமோம் நானும் கூட பேத்திய முந்தா நாள் கொண்டு போய் நூலும் கட்டி கூடும் போட்டுக் கொண்டுதான் வந்தனான்... அப்ப நான் வரட்டே' அவர் நழுவ முயல "ஐயோ வாங்கோவன் போவம்" மீண்டும் மிக்கேலின் அறியாத்தனமான அழைப்பு. "இஞ்சபாரு தம்பி நீங்களும் நாள் தவறாம கோயில் குளமெண்டு போறதும் பக்திச் சபைகளில் திரிமிறதும்..... இல்ல தெரியாமத்தான் கேட்கிறன் கண்டதென்ன சொல்லு பாப்பம். காக்கொத்தரிசிக்கஞ்சியும், காய்ஞ்ச வயிறுகளும், ஓட்டக் குடிலும், அகதிச் சீவியமும்தான் மிச்சம். நான் வாறன்" திரும்பிப் பார்க்காமலே அவர் போகிறார். ஏழை மிக்கேல் பங்குமனை நோக்கி நடந்தான். ஆலயங்கள் அதிகரித்து, பங்குகள் விசால மடைந்து, அருட்த் தந்தையர்கள் அதிகரித்து, அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் அறிமுகமாகி அரும்பணியாற்றி எத்தனையோ வகையில் வளர்ந்து பெருமை பேசும் மாவடத்தில் இந்த நாட்களிலும், இந்த மண்ணிலும் இப்படியான மக்களும் வாழத்தான் செய்கிறார்கள். பாறையில் கட்டப்பட்ட வீடுகள் போன்று விசுவாச வாழ்வில் இவர்கள் உறுதி பெற்று உண்மைக் கத்தோலிக்கர்களாய் குருதி சொட்டிய கொல்கொத்தா பாதையில் அவரது சிலுவையை சுமந்துகொண்டு வாழ்க்கைப் பயணத்தைத் தொடர இந்த இதயங்கள் மனமாற்றம் பெறுமா? மெல்லியதோர் ஏக்கப் பெருமூச்சு வெளிவர எனது நெருடல்கள் மெல்ல அவிழ்கின்றன. இல்லை உதிர்கின்றன. நான் நடக்கிறேன்.●

**J. டேவிட்**
*சொறிக்கல்முனை.*

## கத்தோலிக்கர் தொகை அதிகரிப்பு!

1978ம் ஆண்டோடு ஒப்பிடும் போது 2000மாம் ஆண்டில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை முப்பத்தியெட்டு வீதம் அதிகரித்திருப்பதாக அண்மையில் திருப்பீடம் வெளியிட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 1978ம் ஆண்டில் 75 கோடியே 70 இலட்சமாக இருந்த கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 2000மாம் ஆண்டில் 104 கோடியே 5 இலட்மாக உயர்ந்துள்ள தெனக் கூறும் திருப்பீடத்தின் ஆண்டு புள்ளிவிபரக் குறிப்பு, உலக மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தோடு ஒப்பிடும் போது திருச்சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கைப் பெருக்கம் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவிக்கின்றது. அமெரிக்கக் கண்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 62.8 வீதத்தினரும் ஐரோப்பாவில் 40 வீதத்தினரும் ஆசியாவில் 2.9 வீதத்தினரும் கத்தோலிக்கர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக ஆயர்களைக் கொண்டிருப்பதில் அமெரிக்கக் கண்டம் முதலிடத்தையும், குருக்களின் எண்ணிக்கையில் ஐரோப்பா முதலிடத்தையும் கொண்டிருப்பதாகவும் இப்புள்ளி விபரம் கூறுகிறது.


## உலக இளைஞர்களின் செபக்கூட்டம்

அண்மையில் இத்தாலியில் நடைபெற்ற இளைஞர்களுக்கான கத்தோலிக்க அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட உலக இளைஞர்கள் உலக அமைதிக்கான தங்கள் அர்ப்பணத்தை வெளியிட்டுள்ளனர். உலகில் அமைதி அச்சுறுத்தப்பட்டிருக்கும் ஏறத்தாள 20 இடங்களுக்கென தனிப்பட்ட முறையில் ஒன்று கூடிச் செபித்த இவர்கள் புனித பூமியின் அமை திக்காகவும் செபித்தனர். 72 நாடுகளிலிருந்து இத்தா லியின் லுக்கியானா என்ற இடத்தில் கூடிய ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட இவ்விளைஞர்கள் உலக அமைதிக்கு உழைப்பதற்குக் தம்மை அர்ப் பணிப்பதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது. 1943ம் வருடம் கியானா லூசிக் என்பவரால் தொடக்கப்பட்ட இவ்வமைப்பு 182 நாடுகளில் இருபது இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணையில் யேசுவின் பிரசன்னம்



புதிய ஏற்பாட்டில் இசேு மக்களுடன் தமக்குள்ள உறவை தொடர்ச்சியானதொன்றாக்க விரும்பினார். இதற்காகவே நற்கருணையை ஏற்படுத்தினார். கடைசி இராவுணவு நிகழ்ச்சியானது இதனைத் தெளிவாக விளக்குகின்றது. ''இது என் உடல், இது என் இரத்தம் (மத் 26-28) என் தசை மெய்யான உணவு, இது என் இரத்தம் மெய்யான பானம்'' (யோவான் 6:55) என்ற இயேசுவின் சொற்களும், தகுதியான தயாரிப்பு இல்லாமல் நற்கருணை உட்கொள்வது இயேசுவின் திரு உடலுக்கு எதிராகச் செய்கின்ற பாவமாகும் என்ற புனித பவுலின் அறிவுரையும் (1கொரி 11:27) நற்கருணையில் இயேசுவின் மெய்யான பிரசன்னத்தை எடுத்துரைக்கின்றன.

தொடக்கத் திருச்சபையில் நற்கருணை விருந்தில் பங்கேற்ற மக்கள் எஞ்சிய நற்கருணையைத் தங்களது இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பாதுகாத்து தினமும் உண்டு வந்தனர். இப்பழக்கமானது கி.பி5 ஆம் நூற் றாண்டுவரை நீடித்ததாக புனித ஜெரோம் சான்று பகர்கின்றார். இவ்வாறு இல்லங்களில் நற்கருணையை உண்பதற்கு முன்பாக உணவு உண்ணலாகாது என்றும் ஹிப்போட்டஸ் என்பவர் ''அப்போஸ்தலர்களின் பாரம்பரியம்'' என்னும் நூலில் கூறியிருக்கிறார். காலப்போக்கில் நோயுற்ற வர்களுக்கும், திருப்பலியில் கலந்துகொள்ள இயலாதவர்களுக்கும் அளிக்கும்படி கோவிலில் நற்கருணையை வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. கி.பி. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த புனித ஜஸ்டின் என்பவர் தனது நூலில் திருப்பலிக்குப் பிறகு திருத்தொண்டர்கள் நற்கருணையைக் கரங்களில் ஏந்திச் சென்று உடல் நலமில்லா நோ யாளிகளுக்குப் பகிர்ந்தளித்ததாகக் குறிப்பிடுகின்றார்.

அந்தியோக்கியாவில் இஞ்ஞாசியார் ''நற்கருணையானது நமக்காகப் பாடுபட்ட அதே கிறிஸ்துவின் உடல்'' என்கிறார். கிறிஸ்சோஸ்தம் அருளப்பர், இசேவின் பிரசன்னம் பற்றி குறிப்பிடுகின்றபோது வரலாற்று நாயகன இயேசுவை நற்கருணைநாதர் இயேசுவில் காண்பதாகச் சொல்கின்றார். புனித அம்புரோசியார் ''வரலாற்றில் கன்னிமரியிடமிருந்து பிறந்த இயேசுவின் உடலும் நற்கருணையிலுள்ள யேசுவின் உடலும் ஒன்றே'' என்கிறார்.

லூத்தரன் சபையைச் சார்ந்ததோரும் நற்கருணையில் இயேசுவின் பிரசன்னத்தை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் ''நற்கருணை கொண்டாடும் பொழுது மட்டுமே அதில் இயேசுவின் பிரசன்னம் உண்டு'' என்று சொல்லி நற்கருணையை திருப்பலிக்குப் பின் பேழையில் வைத்து ஆராதனை செய்வதை அவர்கள் ஏற்பதில்லை. நற்கருணை உண்ணப் பட வேண்டிய ஆண்டவருடைய விருந்து மட்டுமே அல்லது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஆண்டவருடைய விருந்து மட்டுமே என்கின்றனர், அதுபோலவே மற்ற கிறிஸ்தவ சபையினர் மத்தியிலும் நற்கருணை ஆராதிக்கப்படுவதில்லை. லூத்தரன் சபையினர் அப்பஇரசத்தின் கருப்பொருள்கள் மாறுவதில்லை இருப்பினும் அவை இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் விளங்குகின்றன அப்பமும் இயேசுவின் உடலும், இரசமும் இயேசுவின் இரத்தமும் ஒரே நேரத்தில் ஒன்றாக இருக்கின்றன என்கின்றனர். பிற சபையினர். ''அப்பமும் இரசமும் மாறுவதில்லை, நற்கருணையில் அடையாளப் பிரசன்னமே விளங்குகிறது. ஆண்டவர் விருந்தில் பங்கு கொள்வது ஓர் அடையாளச் செயல்தான் என்கின்றனர். லூத்தர் ''கிறிஸ்துவின் பிரசன்னம் உண்மை ஆனால் திருப்பலியில் மட்டுமே இந்தப் பிரசன்னம் மேலும் அப்பமும் இயேசுவின் உடலும் ஒரே சமயத்தில் ஒன்றாக இருக்கின்றன. என்கிறார். கால்வின்'' 'அப்பமானது கிறிஸ்துவின் பிரதிநிதி அல்ல, மாறாக அப்பத்தில் இயேசு பிரசன்னமாக இருக்கின்றார். எனவே நற்கருணை என்பது

அப்பமும் இயேசுவின் உடலுமாகும் என்கிறார் ஸ்விங்லி, நற்கருணை என்பது நமது விசவாசி களையும் அவிசுவாசிகளையும் வேறுபடுத்திக் காட்டு கின்ற ஓர் அடையாளம். கடைசி இராவுணவின் போது இயேசு அப்பத்தையும், இரசத்தையும் ஓர் அடையாள மாகத்தான் பயன்படுத்தினார். எனவே இதற்கு அதிக முக்கியத்துவம் தேவை இல்லை' என்கிறார்.

கத்தோலிக்கரைப் பொறுத்தமட்டில் இயேசு வின் பிரசன்னம் மெய்யானது. நிலையானதும் கூட என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பிரசன்னம் பற்றிய விளக்கத்தில் பல இறையியல் கருத்துக்கள் நிலவுகின்றன. குறிப்பாக, புனித அக்குவின் தோமை யார் கூறும் அப்பரச முழுக் கருப்பொருள் மாற்றம் (Transubstiation) என்ற கொள்கை விளக்கத்திற்கு பல புதிய பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய அறிவியல் கண்ணோட்டத்தில் Substance. accident போன்ற கருத்துகளைப் பயன்படுத்து வதை விட அப்ப இரச உரு மாற்றத்தையும் இயேசு வின் பிரசன்னத்தையும் குறிக்க Transigni fication (குறிப்பொருள் மாற்றம்) Transfinalisation (பொருள் குறிக்கோள் மாற்றம்) என்ற புதிய செற்களைப்பயன் படுத்தி விளக்க முற்படுகிள்றனர் புனித அம்பு ரோசியார், 'ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உருவாக்கக் கூடிய ஆற்றல்மிக்க இறைவனுடை வார்த்தைக்கு ஏற்கனவே இருக்கின்ற ஒன்றிலிருந்து இல்லாத ஒன்றை உருவாக்குவது எளிதானது. எனவே இறைவனுடைய வார்த்தையானது அப்பத்தையும் இரசத்தையும் இயேசுவின் உடலாகவும் இரதமாகவும் மிகவும் எளிதில் மாற்றிவிடுவின்றது.' என்கிறார்.

**இன்று கத்தோலிக்க திருச்சபையின் போதனை:**

திருப்பலியில் அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன. இது உண்மையான மாற்றமாகும். அவற்றில் இயேசு மெய்யாகவே பிரசன்னமாக இருக்கின்றார். அப்பமும் இரசமும் இயே சுவைச் சுட்டிக்காட்டும் அடையா ளங்கள் மட்டுமல்ல, மாறக எதைக் குறிக்கின்றதோ அதைத் தன்னகத்தே முழுமையாகக் கொண்டுள்ள நற்கருணை வெறும் அடையாளமாக நம் கண் களுக்குத் தென்பட்டாலும், அதில் இயேசு மெய்யா கவே பிரசன்னமாக இருக் கின்றார். உயிர்த்த ஆண்ட வரின் உண்மையான பிரசன்னம் அதில் உண்டு: நற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பின்னும் இயேசுவின் தொடர் பிரசன்னம் உண்டு என்பது திருச்சபையின் ஆழமான விசுவாசம். நற்கருணை யிலுள்ள இயேசுவின் உடல் மகிமைப்படுத்தப்பட்ட உடல் எனவே இது இயற்பியல் மற்றும் வேதியல் சட்டங்களுக்கு உட்பட்டதல்ல. இயேசுவின் மகிமைப் படுத்தப்பட்ட உடலின் பிரசன்னமானது இவ்வுலகில் அவர் எங்கு இருக்க வேண்டு மென்று விரும்பு கின்றாரோ அங்கு இருக்கின்றது. இயேசுவின் உடலானது பலுகச் செய்யப்படுவது. கிடையாது. மாறாக அவரது பிரசன்னம்தான் பலுகச் செய்யப் படுகின்றது. இயேசுவின் பிரசன்னமானது அரை குறையானதல்ல. மாறாக அது முழுமையானது.

## சூழல்

அகாலமழை அடைமழையாய்ப்
பொழிவதென்ன?
ஆழ்கடலும் கொந்தளித்துக்
குமுறலென்ன?
தகாதபடி எரிமலைகள்
கொதிப்பதென்ன?
தரை யதிர்ந்து தணற் குழம்பு
தகிப்பதென்ன?
புகார் மூடிப் புயலடித்து
முறிப்பதென்ன?
பொலிவிழந்து புவனமெல்லாம்
அழிப்பதென்ன?
புகாரிட்டாற் கேட்பாரோ
பூவின் மாந்தர்
புறச்சூழல் மாசடையாக்
காப்பார் கொல்லோ!

**கே. ஜே. வேலுப்பிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியின் அவதாரம்

அந்தி சாய்வதை அவதானி - புது
ஆடை அணியிதே நம் பூமி
சிந்தும் இரவினை கண்காணி - தென்றல்
தீண்டலில் நனைந்திடும் உன் மேனி!

வானச் சூரியன் எங்கே? - அவன்
வந்தப் பாதையும் எங்கே?
நாண வெண்ணிலா ஒளிர - அவன்
நழுவி ஒழிவது எங்கே?

பாடும் பறவைகள் எங்கே? - அவை
பாடும் கீதங்கள் எங்கே?
ஓடும் அணில்கள் எங்கே? - அவை
உந்தும் சிந்தனை எங்கே?

சுட்ட வெய்யிலும் எங்கே? - உடற்
சூட்டு வியர்வையும் எங்கே?
பட்டப் பகலில் கண்கள்
பார்த்த காட்சிகள் எங்கே?

மஞ்சள் வானம் எங்கே? - அதன்
மௌன லீலைகள் எங்கே?
பிஞ்சு மேகங்கள் எங்கே? - அவை
பிரிந்து செல்வது எங்கே?

மாலை நேரம் எங்கே -அதில்
மயங்கும் மனிதன் இங்கே - அவன்
தாளை ஏந்தி யாத்த - நல்ல
சந்தக் கவியில் இங்கே!

பெனி யே. ச

# இஸ்லாமியரையும் அரவணைத்த

## விபுலாநந்த அடிகளார்

கண. மகேஸ்வரன்

"குறைந்தபட்சம் உனது மார்க்கக் கடமைகள் பற்றி யாவது நீ தமிழில் அறிந்து வைத்திருக்கிறாயா?' என்று கேட்டார். அவன் தன் இயலாமையை ஒத்துக் கொண்டு 'இல்லை' என்று பதிலிறுத்தான். அதற்காக அடிகளார் அவனைப் புறந்தள்ளிவிட வில்லை. அவனுக்குத் தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் சிறப்புக் கவனமெடுத்துப் பயிற்றுவித்தார். அவனும் தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்டு 'கலாநிதி'ப் பட்டமும் பெற்றான்.

முதன் முதலாக சென்னை அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக அடிகளார் ஆற்றிய தொண்டு போலவே, அந்த மாணவன் இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப்பேராசிரியராய்த் தொண்டாற்றும் தகைமை பெற்ற ஆசானாய்த் திகழ்கின்றான். கலாநிதி எம்.எம். உவைஸ் என்றால் இன்றைக்கு அவர் பற்றித் தெரியாதவர்கள் இருக்கமுடியாது.

அடிகளார், தம் வாழ்வில் கூட ஒரு புதுமையான மனிதராகவே திகழ்கின்றார்.

முதலாவது உலக மகா யுத்தம் நடந்த காலத்தில் தேசிய தொண்டராகப் பயிற்றப்பட்டு துப்பாக்கியுடன் கப்பலேறிப் புறப்பட்ட நெஞ்சுரமிக்க வீரர் அடிகளார். இவர் போர் முனைக்குப் புறப்பட்ட வேளையில், யுத்தம் முடிந்து விட்டதான அறிவித்தலுடன் இவர் பயணம் தடைப்பட்டது. அத்தகைய வீரமும் நெஞ்சுரமுமிக்க அடிகளார்தான் ஈற்றில் மனிதாபிமானத்துடன் தொண்டாற்றத் தலைப்பட்டாரென்றால் என்னே, அவர் தம் மாண்பு!

இத்தகைய அறிய வேண்டிய பல உண்மைகளை ஜனாப் எம்.எம்.எம். மஹ்ரூப் கரீமின் உரையிலிருந்து அறிய முடிந்தது. அதனை இங்கு பகிர்ந்து கொள்வது பொருத்தமானதென எண்ணுகின்றேன்.

*'சைவமும் தமிழும் தழைத்தோங்க வழி சமைத்தவர் சுவாமி விபுலாநந்தர்'* என்ற பொதுக்கூற்றுக்கு அப்பால் சில நிகழ்வுகளை இங்கு முன்வைத்தல் பொருத்தமானது. இவை சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நிகழ்வுகளின் போது காத்தான்குடி ம.ம வி அதிபரும், கொத்தணி அதிபருமான ஜனாப் எம். எம். மஹ்ரூப் கரீம் முன்வைத்து ஆற்றிய உரையில் சில பகுதிகளை அடிப்படையாகக் கொண்டது.

மட்டக்களப்பு கல்லடியில் சிவானந்த வித்தியாலயத்தை நிறுவியபோதும், அங்கு இஸ்லாமிய மாணவர்களையும் சேர்த்து கல்விபயில அரவணைத்துக் கொண்டதன் மூலம், தான் ஒரு மனிதாபிமானமிக்க தமிழ்த் தொண்டன் என்பதனை நிலை நாட்டினார். அத்தோடு நின்று விடாமல், அவரவர் மார்க்கங்களில் நெறிநின்று வாழ்வதற்கும் உற்சாக மூட்டினார். புலவர்மணி Dr .A. M ஷரிபுதீன் அவர்களும் சுவாமி விபுலாநந்தரின் இந்த நல்ல பணிபற்றி விதந்துரைத்துள்ளார். அன்றைய காலகட்டத்தில் அடிகளாருடன் சிவானந்தா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்ட ஓர் இளம் முஸ்லீம் மாணவன் தன் மார்க்கக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றத் தெரியாதவனாக இருந்தான். அது ஒரு ரமிழான் காலம், முஸ்லீம்கள் தமது தொழுகைக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி நோன்பு நோற்றொழுக வேண்டிய புனித காலம். அத்தகைய ஒரு புனித நாளில் அந்த மாணவன் மதிய உணவை முடித்தபின்பு தூங்கிக்கொண்டிருந்தான். பி.ப 3 மணியளவில், அடிகளார் அவனைத் தட்டி எழுப்பி, தன் கையிலிருந்த அரபு மொழியில் எழுதப்பட்ட புனித குர் ஆனின் சில பகுதிகளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறி, அவனை மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுமாறு தூண்டிவிட்டார். அத்தகைய மதங்கடந்த ஓர் அஹிம்சாவாதி விபுலாநந்த அடிகளார்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் அடிகளார் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக இருந்த சமயம், சிங்கள மொழி மூலம் உயர்கல்வி வரை தன் படிப்பைத் தொடர்ந்த கொழும்பு வாழ் ஒரு முஸ்லீம் மாணவன் அடிகளாரை நெருங்கி, தான் தமிழில் சிறப்புப் பட்டதாரியாக வர விரும்புவதாகத் தெரிவித்தான். அடிகளார் அம்மாணவனை ஆழ்ந்து நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுப் பொருள் – 03

பங்குகொள்ளும் ஒன்றியத்தின் மூலம் நிறைவான வாழ்வைப் பெறுவோம்

### 7ம் பாடம்

கிறிஸ்தவ ஒன்றியம் இன்று எதிர் நோக்கும் சவால்கள்

**7.1 காலத்தின் சவால்களுக்கு மத்தியில் சலிப்படையாது ஏறுநடைபோடும் கிறிஸ்தவ ஒன்றியம்**

இன்றைய உலகம் முன்னேற்றப் பாதையை நோக்கி மிக வேகமாகச் செல்கிறது. இதற்கிடையில் நாம் செய்யவேண்டியவை:

1. கிறிஸ்தவரின் தனித்துவம் பற்றியறிதல்
2. கிறிஸ்தவர் எனும் ரீதியில் இலங்கைச் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய சேவையின் தன்மைகளையறிதல்.
3. தாய்த் திருச்சபையிலிருந்து பிளவுபட்டுப் பிரிந்து சென்றுள்ள பிரிவினைக் கிறிஸ்தவர் பற்றியறிதல்.
4. ஆரம்பக் கிறிஸ்தவர்களிலிருந்து இவர்களைப் பிரித்த சக்திகளையறிதல்.
5. கிறிஸ்தவ அர்ப்பணவாழ்வு, வழிபாடுகள் வழியாக முன்மாதிரியான விசுவாச வாழ்வு வாழுதல்.

**7. 2: கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிலைப்பாடு**

இன்றைய சவால்களுக்கு மத்தியில் ‘உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’ என்ற இயேசுவின் வார்த்தைகளினூடாக ஒன்றாகவும், தூய்மையாகவும், அப்போஸ்தலத்துவ வழியாகவும், பொதுவான நிலையிலும் இன்றுவரை திருச்சபை வளர்ந்து வருகிறது.

**திருச்சபை உறுதியாக நிலைத்திருக்கக் காரணிகள்**

- ❒ திருமறையை விளக்குதல்
- ❒ கருத்துமிக்க இறையாராதனைகள்
- ❒ மறைபரப்புப்பணி
- ❒ ஒரே விசுவாசத்திற்குச் சான்று பகருதல்
- ❒ ஒரே ஆண்டவரைப் பகிர்தல்
- ❒ ஒரே திருமுழுக்கு

**7.3 சகல சவால்களையும் ஏற்றுக்கொண்டு சேவை செய்ய ஆயத்தமாயிருக்கும் கிறிஸ்தவ ஒன்றியத்தின் உறுதிநிலை**

# மாணவர் பக்கம்

க.பொ.த. (சாதாரணம்)
– கத்தோலிக்கம் –
* மெற்றில்டா



அன்று தொடக்கம் இன்றுவரை செயற்படுத்தப்பட்டு வந்த திருச்சபையின் உறுதிப்பாடு மூலம் பல வித சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டி நேரிடும்.

- ❒ இன்றைய சமூகத் தொடர்புச் சாதனங்களின் தீமைகளை விலக்கி நன்மை தரத்தக்க வகையில் பயன்படுத்தல்.
- ❒ நற்பண்புகொண்ட அறநெறிக்கருத்துக்களைப் பிரசுரங்களாக வெளியிட்டு மக்களைத் தீமையிலிருந்து விலகிவாழ வழிகாட்டுதல்.
- ❒ வியாபார விளம்பரங்களைப் பார்த்து மயங்காது அவை பொய் என அறிதல்.
- ❒ விஞ்ஞான - தொழில்நுட்பம் வளர்ந்துள்ள உலகில் இறையரசின் முக்கியத்துவத்தை மக்களுக்கு அறிவுறுத்துதல்.
- ❒ நேர்மையற்ற செயல்களைச் சரியானவையெனக் காட்டும் தலைமைத்துவத்தில் வாழும் மக்கள் நல்லொழுக்கமுள்ளோராக வாழ வழிகாட்டுதல்.
- ❒ கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் வாழ்வுக்கல்ல, வெறும் அறிவுக்கே எனும் எண்ணத்தை மாற்ற முயற்சி செய்தல்.
- ❒ இறைவனை - உலகச் செல்வங்களோடு ஒப்பிடும் மூடநம்பிக்கையிலிருந்து மனிதனை விடுவித்தல்.
- ❒ தொழிலாளரின் நலன் பேணாது, வருமானத்தில் மாத்திரம் கவனமுள்ள முதலாளிகளின் மத்தியில் இறைவனது கட்டளை மூலம் மனிதாபிமானத்தை உருவாக்குதல்.

**பரிசுத்த திருச்சபை**

- ❒ கிறிஸ்தவ ஒன்றியத்தின் (பரிசுத்த திருச்சபையின்) துணையானவர் கிறிஸ்துவே.

மத்தேயு 16: 12 மத்தேயு 28: 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல.
- கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டு, வழிநடத்தப்படுவது.
- மனித பலவீனங்கள் அதிலிருந்தாலும் வரலாற்றில்: ஆறுதலை, விடுதலையைப் பெறச் செய்ய உழைத்ததால் பரந்து இன்றும் நிலைக்கக் காரணம் தூய ஆவியாரின் வழிநடத்துதலே.
  யோவான் 14: 14, 14:16, 14:18, 14:26.

**7.4 பங்கு கொள்ளும் பொதுக் கிறிஸ்தவ ஒன்றியம்**

தனித்துவத்தைக் கூட்டமாகப் பேணுவதல்ல இது. மாறாகத் திருச்சபையில் பங்குகொண்டு வாழ கிறிஸ்துவின் வழிநடத்தல்களை அறிவதவசியம். மாற்கு 9: 40, மீக்கா 6:8 லுக்கா 5: 1 - 7

## பாடம் – 8

### இறையரசுக்குச் சான்றுபகரும் கிறிஸ்தவ ஒன்றியம்

**8:1 இறையரசுக்குச் சான்றுபகர கிறிஸ்தவ ஒன்றியங்கட்கு அவசியமான செபங்களும், அப்போஸ்தலிக்கச் சேவையும்:**

- நாம் கிறிஸ்தவ ஒன்றியத்தின் அங்கத்தவர் என்றமுறையில் இறையரசுக்குச் சான்றுபகர வேண்டும்.
- இறையரசுக்கெதிராக இயங்குவது இறைசித்தத்தை முற்றாகப் புறக்கணிப்பதாகும்.
- மனித செயற்பாடுகளை அவர்களின் உள்ளங்களில் முழுமையடையச் செய்வதே இறைசித்தம்.
- கிறிஸ்துவின் வாழ்வு இறைதந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருந்தது. இறைவனின் உறவால் இதை அவர் செய்தார். மக்களை இறைவார்த்தையால் ஊட்டம் பெறச் செய்தார். செபம், இறையாட்சி வெளிப்பாடு என்பன அவருக்கு ஒன்றாகவே இருந்தது.

**8:2 இயேசு சீடரைச் சேவைக்கனுப்பி, திரும்பி வந்தபோது மதிப்பீடு செய்தார்:**

- இயேசு இறையரசை அறிவிக்க உதவியாகச் சிலரைத் தேர்தெடுத்தார். பயிற்சியளித்தார்

- 'அறுவடை மிகுதி, வேலையாட்களோ குறைவு, ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்' என்று கூறிய இயேசு சில கடமைகளையும் வழங்கினார். அவை வருமாறு

1. புறப்பட்டுப் போங்கள்
2. ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளையனுப்புவது போல உங்களை நான் அனுப்புகிறேன்.
3. பணப்பையோ, வேறு பையோ, மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம்.
4. வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.
5. நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும். இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக என முதலில் கூறுங்கள்.
6. இறையாட்சி அவர்களை நெருங்கிவந்துவிட்டதெனச் சொல்லுங்கள்.

- 'அசுத்த ஆவி உங்களுக்குப் பணிகிறதென்று நீங்கள் மகிழ்ச்சியடையவேண்டாம். உங்களுடைய பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதையிட்டு மகிழ்ச்சியடையுங்கள் என்று கூறிச் சேவையின் முக்கிய தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார்.

**8:3 சான்று பகரும் சவாலைப் பரிசுத்த திருச்சபை முன்கொண்டு செல்கிறது.**

- பட்டம், பதவி படைத்தவர்கள் கடமைகளில் தவறுவது இன்று சாதாரணமானதொரு விடயமாகவுள்ளது. அநாவசியமான சட்டதிட்டங்கள் மக்களைத் துன்புற வைக்கின்றன. 'சமூக சேவை' எனும் போர்வையில் தாமே நன்மையடைபவர் பலர்.
- இயேசு தம்மையே தாழ்த்திச் சீடரின் பாதங்களைக் கழுவியதன் மூலம், நாமும் அதிகாரம், பொறுப்புக்களையேற்று, நன்மைகளைச் செய்ய வேண்டும்.
- இறையரசைப் பரப்ப, பரிசுத்தத் திருச்சபையின் அலுவல்களில் ஈடுபட எமக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.
- கிறிஸ்து தம்பணியைப் பரிசுத்த திருச்சபை வழியாக உலக முடிவுவரை செய்து கொண்டிருக்கிறார்.
- இப்பணியைப் பல நிலையிலுள்ள பலரிடம் ஒப்படைத்துள்ளார்
- திருச்சபைப் பணியாளர் தம் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகத் தூய ஆவியார் அவர்களிடத்தில் செயற்படுகிறார்.
- தூய ஆவியாருக்காக நம் உள்ளங்கள் திறக்கப்படுமானால் எம் சேவை கருத்துள்ளதாகவும், நிறைவானதாகவும் இருக்கும்.
  எபேசியர் 4:11, மத்தேயு 10:42

- திருச்சபையில் பல வித சேவைகளுண்டு
- அவை ஒவ்வொன்றும் இறையாட்சியின் வருகைக்காகவும் வளர்ச்சிக்காகவுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர வழி

வாழ்த்தும் பாராட்டும் உணர்வதற்கு வழிகள்! பொறாமையும் பூசலும் தாழ்வுக்கு வழிகள் அடுத்தவரைப் பாராட்டிக் கொண்டேயிரு நீ உயர்ந்து கொண்டே இருப்பாய்

❐ சேவைகளனைத்திற்கும் கிறிஸ்துவே தலைவர்.
❐ எல்லாச் சேவைகளும் கிறிஸ்துவுக்காகச் செய்பவைகளாக இருத்தல் வேண்டும்.

**8:4 இலங்கையில் சேவை செய்வதன் மூலம் இறையரசின் விழுமியங்களைப் பாதுகாப்போம், வளர்ச்சியடையச் செய்வோம்:**

❐ திருச்சபையின் அங்கத்தவர் நாங்கள்.
❐ எனவே, கிறிஸ்தவ மதிப்பீடுகளை உறுதிப்படுத்தவும், அவற்றைச் சமூகத்தில் வளர்க்கவும், பரப்பவும் முயற்சி செய்ய வேண்டும்.
❐ சமாதானம், ஒற்றுமை, சமத்துவம், பொதுத்தன்மை, நீதி போன்ற மதிப்பீடுகளைச் செயற்படுத்த வேண்டும்.
❐ கிறிஸ்தவ மதிப்பீடுகள் உலகில் திருச்சபை மூலம் உயிரூட்டம் பெறவேண்டும்.

## 9ம் பாடம்

### நிறைவையும் முடிவையும் தேடிச்செல்லும் கிறிஸ்தவ ஒன்றியம்

**9.1 'இன்றைய உலகில் திருச்சபை' எனும் 2ம் வத்திக்கான் பொதுச்சங்க வெளியீட்டின்படி, கத்தோலிக்கத் திருச்சபை 'திருயாத்திரை' செய்கிறது. இது இறையரசு முழுமையாக வெளிப்படும் போது முடிகிறது. இந்நிலை படைப்பு பூரணத்துவம் பெற்று முழுமையாகும் வேளையில் நடைபெறும்.**


❐ ஒருவன் முழு உலகத்தையும் தனதாக்கிக் கொண்டாலும் தன்னுடைய ஆன்மாவை இழந்து விடுவானானால், அதனால் என்ன பயன்?
❐ பரிசுத்த திருச்சபையின் வாழ்வுவெறும் சடங்காசார முறைகளில்ல. மாறாக விசுவாசத்தில் தங்கியுள்ளது. எனவே, உறுதியான விசுவாசத்தின் மூலம் திருச்சபை வாழ்வை ஊட்டம்பெறச் செய்ய வேண்டும். இதைப் பொது வழிபாடு மூலம் வெளிப்படுத்த வேண்டும்.
❐ முழுமை உடனே உருவாகுமென ஆரம்பக் கிறிஸ்தவர்கள் எண்ணி எதுவும் செய்யாது காலத்தை வீணாக்கினர்.
❐ இயேசு தம் வாழ்வால், நாம் வாழவேண்டிய முறைகளை எடுத்துக் காட்டினார்.
❐ நல்ல சமாரியன், செல்வந்தனும் இலாசரும் போன்ற உவமைகள் மூலம் உண்மையான நற்பண்பும், சகோதரத்துவமும் எதுவென இயேசு எடுத்துரைத்தார்.
❐ மற்றவரில் அன்புகொண்டு செயற்படாதவர்கள் இறைவனிடமிருந்து இரக்கத்தையோ, அன்பையோ எதிர்பார்க்க முடியாதென அவர் தம் செபத்தின் மூலம் எடுத்துரைத்தார்.
❐ நல்லதொரு முடிவு வரும் நாளையும், நேரத்தையும் எதிர்பார்த்திருப்பதைவிட, ஆண்டவரில் அன்றாடம் செய்யவேண்டிய காரியங்களைச் சரிவரச் செய்வது தான் முடிவைக் காணச் சரியான வழி எனக் கற்பித்தார்.
❐ பத்துக் கன்னியர்களின் உவமை மத்தேயு 25: 1-15,ஊழியர் மூவருக்கு நாணயங்களைக் கொடுத்து விட்டு, ஆட்சி உரிமை பெற்றுவரத் தொலை நாட்டுக்குப் புறப்பட்ட உயர் குடிமகன் உவமை லூக்கா 19: 11-27 ஆகியன மூலம் நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைத்துள்ள திறமைகளை விருத்தி செய்து உலகைப்பூரணம் பெறச் செய்ய முயல வேண்டும் என்கிறார்.
❐ பங்கு கொள்ளும் திருச்சபையில் உலக நிறைவின் முன்னடையாளங்களைக் காணலாம்.
❐ மக்கள் தத்தம் உரிமைகளைத் தேடுவதிலும் பார்க்கப் பிறர் மத்தியில் கடமைகளை நிறைவு செய்வதன் மூலம் உலகமுடிவை எதிர் கொள்ளலாம்.
❐ பிறரின் தேவையை அறிந்து செய்வது, ஒன்றியத்தின் உறுதியான பண்பாகும்.
❐ நவீன சமூகத் தொடர்புச் சாதனங்கள் மூலம் நாம் உருவாக்கும் நவீன உலகைப்பார்க்க, முழு உள்ளத்தோடும், ஆன்மாவோடும் ஒருவர் ஒருவரோடு துன்பதுயரங்களைப் பகிர்ந்து கண்ணீர்களைத் துடைப்பது உயர்ந்த பண்பாகும்.
❐ அவ்வாறு செய்வது இறைவனின் சாயலாகவும், ஆலயமாகவும் படைக்கப்பட்டுள்ள மனிதனுக்காகவே.

## அறிவாளியா

நீ அறிவாளியாக வேண்டுமென்றால் முற்றும் கற்றுத் தெரிந்துகொள். முழுவதையும் அறிந்துகொள். முட்டையில் அரை வேக்காடு நல்லதென்கிறார்கள் அறிவில் அரைவேக்காடு ஆபத்தானது, அது முட்டாளுக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் மனிதர்கள்

முற்றத்தே சரிந்து கிடந்த மாமரத்தடியில் நிலை தளர்ந்து வாடி இருந்தார் சோமநாதர். அவரது ஒவ்வொரு மூச்சும் இதயத்தின் ஆழம் வரை சென்று வேதனைகளைப் பிரசவித்துக் கொண்டிருந்தது. அவர் இருபத்தைந்து வருட சேவையிலே நியாயமான சேவைகளைச் செய்து விட்டு ஓய்வு பெற்றுவிட்ட ஒரு நேர்மையான ஊழியரென்பது எல்லோருமறந்ததொன்றுதான். சோமநாதரைப் பொறுத்தவரை அவருக்கு எல்லாமே முடிந்து விட்டது போன்ற பிரமை. பதினைந்து வருடங்களுக்கு மேலாகக் கடன் பட்டுக் கட்டி முடித்த வீட்டின்கடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் முற்று முழுதாகத் தீர்க்கப்பட்டது. அந்த நிம்மதியை நீடிக்கவிடாமல் 'பொம்பர்' தாக்குதலின்போது வீடு நிர்மூலமாகி ஒரு பக்கச் சுவரோடு அநாதையாகி நிற்பதைப் பார்க்கும்போது அவருக்கு எதிலுமே நம்பிக்கையற்று எதிர்காலமில்லாத நிகழ்காலத்திலே ஊசலாடுவது போன்ற நிலையாகவே தென்பட்டது.

வீட்டைப்பொறுத்தவரை மகனைப்படிக்க வைத்து அவனை ஒரு நல்ல நிலையிலே காண ஆசைப்பட்டிருந்தார். பல்கலைக்கழகத்திலே படித்துக்கொண்டிருந்த மகன் படிப்பை முடித்து வெளியேறியதும் தமக்கையாரையும் ஒரு படியாகக் கரைசேர்த்து விடலாமென எண்ணி இருந்தவருக்கு மகன் போராடத் தலைப்பட்டு வீர மரண மடைந்ததோடு அவரது நம்பிக்கையின் பெரும் பகுதி கடற்கரை ஓவியமாகியிருந்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயங்களும் வேதனைகளையே சுமந்து மென்று கொண்டிருந்தன.

பவித்திராவை நினைக்கும்போது தந்தை என்கிற அளவில் அவருக்குப் பெரும் கவலைதான். அவரது உடன் பிறந்த தங்கையின் மகன் முரளிக்கு அவனைத் திருமணம் செய்து வைப்பதில் இரு வீட்டாருக்கும் உடன்பாடு இருந்தாலும் பெடியனின் தகப்பனார் கரார் பேர்வழி. சீதன விஷயத்தில் ஒரு சதம் குறைந்தாற் கூட ஏற்க மாட்டாதவரென்பது எல்லோரும் அறிந்ததுதான். 'அத்தான் எங்களின்ற உறவுகளை வலுப்படுத்திறதில எந்தப் பிரச்சனையுமில்ல' நாங்களும் இவன் தம்பிக்கு கெம்பசில நல்லாக் காச விட்டுப்போட்டம். உங்களிட்ட அதிகம் நாங்க எதிர்பாக்கல்ல. காசு எழுபத்தையாயிரம், வீடு, வாசல் பிள்ளைக்கு போட வேண்டிய நகை நட்டுக்கள் "இதெல்லாம் சரியென்றால் எங்களுக்குச் சம்மதந்தான்" மைத்துனர் சாதாரணமாகக் கேட்டு முடிந்ததை அவரால் முழுமையாகத் திரட்ட முடியாமலிருந்தாலும் அவரும் ஏதோ ஒரு பகுதியைத் தேடித்தான் வைத்திருந்தார்.

பவித்திராவைப் பொறுத்தவரை இயற்கையாகவே அவளை அழகுபடுத்தி நிற்கும் எழிலும், அமைதியான சுபாவமும் எவரையும் எளிதில் வசீகரிக்கும் காரணிகளாக ஓங்கி நின்றன. அவள் பட்டம் பெறவில்லை யென்றாலும் குறைந்த புள்ளிகள் வித்தியாசத்தால் பல்கலைக்கழகம் செல்லத் தவறிவிட்டவள். என்றாலும் நிறைந்த அறிவுள்ளவளென்பது முரளியும் அறிந்ததுதான். இருவீட்டாரும் அந்தத் திருமணத்தை எந்தக் கோணத்திலிருந்து முடிவு செய்தாலும் அவர்கள் இருவரையும் பொருத்தவரை அது உள்ளூர இணைந்த உறவாகவே அதனை இருவரும் கருதினர். தனக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவன் தனது மனதிலே பதித்துவைத்திருந்த ஓவியத்திற்கு அவள் முற்று முழுதாகப் பொருந்தி நின்றதில் அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிட முடியாத மகிழ்ச்சி. அவளது உணர்விலும் இதே முடிவு தான் மேலோங்கி நின்றது. இலட்சிய உறவிலே இணையப் போகும் அந்த நாளையே இருவரும் எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

எண்ணங்களும் அபிலாசைகளும் சிதறிச் சின்னாபின்னப் பட்டது போன்று அந்தக் கிராமம் குண்டு வீச்சுக்கு இலக்காகி சோகை இழந்ததோடு முரளி வீட்டாரின் உறவும் சற்று ஒதுங்கி நின்றது போல் தென்பட்டது. முரளிக்கு அப்பா எடுத்துள்ள திடீர் முடிவு மனதிற்கு வெறுப்பையும் ஆத்திரத்தையுமே வளர்த்திருந்தது. தான் கீறிய கோட்டை மகன் என்றுமே மீறி நடக்க மாட்டானென்பதும் அவர் அறிந்திருந்ததுதான். "மகன் நான் சொல்லுறதைக் கேள். நீ நல்லா இருக்க வேணுமென்றுதான் நாங்கள் விரும்பிறம். இனியும் நாங்கள் உன்ரை மாமா வீட்டை எதிர் பார்த்து இருக்க ஏலாது. அவங்களின்ர வீடு வாசல் பொருள் பண்டமெல்லாம் போயிற்றுது. இனி அவையள் வீடு கட்டிப் பொருள் சேர்த்து இதெல்லாம் நடக்காத காரியம்... பேசாம நான் சொல்லுறபடி கேள்... நல்ல இடம். ஒரு பிள்ளை தான். கார், பெரிய பங்களா போல் வீடு இனி பிள்ளையின்ர பேரிலதான் எல்லாச் சொத்தும், வீணாகக் குளப்பிப்போடாத".

முரளியின் வீட்டாரின் இந்தத் திடீர் முடிவால் பவித்திராவும் அவளது தந்தையும் நிலை குலைந்திருந்தனர். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அது போலத் தானோ என்னவோ அவர் கொதித்தெழுந்த போது மகள் அவருக்கு ஆறுதலாக "அப்பா நீங்க அவங்களோட சண்டைக்குப் போகாதையுங்கோ. இண்டைக்கு கோபுரங்களே குப்பையில கிடக்கு. கார்.. வீடு வாசல் எல்லாம் ஒண்டாச் சேர்த்து உறவையே உதறித் தள்ளிப் போட்டுது. நானும் முரளி பட்டதாரி.. படிச்சவர்... யதார்த்த வாதியாகத்தான் இருப்பாரெண்டு எண்ணினன் அவரும் சர்வ சாதாரணம்தான்" அவள் அமைதியாகக் கூறியபோது அவரை அறியாமலே அவரது கண்கள் பனித்தன.

மகளை எப்படியும் ஒரு நல்ல இடத்தில் சேர்த்துவிட வேண்டுமெனும்முணர்வு சோம நாதருக்கு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருந்தது. முரளியின் திருமணம் நடந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகி இருந்தன. பவித்திராவைப் பொறுத்தவரை எந்தவித வேதனைகளையும் மனத்திலே புதைத்து வாழ்க்கையை வேதனையாக்கும் அளவிற்கு அவள் அறியாமையில் ஊறிவிட வில்லை. நடந்து முடிந்து விட்டவைகளை எல்லாம் ஏதோ கெட்ட கனவுகளாக எண்ணி ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு அவள் சாதாரணமாக செயற்பட்டுக் கொண்டிருந்தாள். சோமநாதருக்கு மகளைப் பார்க்கும் போது ஒரு பக்கம் ஆச்சரியமாகவும் மறுபக்கம் ஆறுதலாகவும் இருந்தது. அவள் வீணே மனதைக் குழப்பிக் கொள்ளாமல் அமைதியாக இருப்பது அவருக்கு மகிழ்ச்சிதான். இந்த சுமுகமான நிலையைப் பயன்படுத்தி மகளிடம் தனது எண்ணத்தை கேட்க நினைத்த போது தான் "அப்பா எனக்கு மணியைக் கலியாணம் செய்து வைக்கிறீங்களா?" அவள் ஆழமான குரலில் அமை தியாகக் கேட்டு நின்றாள். சோமநாதருக்கு வாயே அடைத்துப்போய் விட்டது. தான் எதை அவளிடம் கேட்கத் துடித்தாரோ அதையே அவள் விரும்பிக் கேட்டபோது அவரால் எதுவுமே பேசத்தோணவில்லை. "அப்பா அவர் பெரிய படிப்பாளி இல்லை.. சொந்தமாகத் தோட்டம் செய்து உயர்ந்திருக்கும் நேர்மையான உழைப்பாளி..". "மகள்".. அவரால் பேச முடியவில்லை. அவளது கண்கள் கண்ணீரை உருக்கி வடித்தன. அவருக்கு நீண்ட காலத்தின் பின்னர் ஓர் ஆறுதல் நிலையை உணர்வது போன்ற பிரமை! இருவருமே எதுவும் பேசிக்கொள்ளாத நிலையில் அமைதி அங்கு நிழலாடுகின்றது. "அப்பா எனக்கு அந்த மணியாரெண்டு கூடச் சரியா கத்தெரியாது. பேரைக் கேட்டிருக்கிறன், சில வேளையில கண்டுமிருப்பன். ஒரு நாள் கூடக் கதச்சதே இல்லை.. ரெண்டொரு நாளா நீங்க படுத்து நித்திரையில வாய் புலம்புவீங்க.. மணி நல்லவன், நல்ல உழைப் பாளி.. அவன் பட்டம் பெறாதவன் தான் ஆனால் நேர்மையானவன்.. என்ரை மகளை கண்கலங்காமல் பார்ப்பான்.. என்ரை பிள்ளையும் வாழத்தான் போறாள்." இப்படியே உங்களின்ர வாயில இருந்துதான் உங்களின்ற மனதில கிடந்ததை நான் உணர்ந்தன். அப்பா நீங்களும் வாழ்க்கையில எவ்வளவோ நொந்து போனீங்கள். உங்களின்ர விருப்பம் போல செய்ய நானும் முடிவெடுத்திற்றன்' அவளது அடிமனத்தின் குரல் வாயாரப் பிரசவிக்க முடியாமல் அவளுக்கு மட்டுமே கேட்கும்படி அது ஒலித்துக் கொண்டிருந்தது.

'மகள் உனக்கு விருப்பமில்லாத எதையும் நான் செய்ய மாட்டேன்' சோமநாதரின் குரல் தளதளத்தது.

'எனக்கு சம்மதமப்பா .... நான்தான் விரும்பிக் கேட்கிறேன்' அதே தொனியில் அவளது குரலும் ஒலித்து நிற்கின்றது. 'மகள் என்னால இயன்ற மட்டும் நானும் பாடுபட்டன்..... உன்ர தம்பி இருந்திருந்தால் கவலை இல்லை. தெரியாதயாரிட்டையும் உன்னை ஒப்படைக்கிறதை விட என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தத் தங்கச்சியின்ர பிள்ளைக்கு செய்து வைக்க எண்ணினன், அது எல்லாம் குண்டு விழுந்து நாசமாப் போயிற்றுது. அவங்களின்ர மனம் அந்த அளவிற்கு விரிவடையல்லம்மா..... ஆனால் ஓர் ஆச்சரியம்! நியாயம் தெரிந்த சிலர் இன்னும் உயிரோடு இருக்கிறாங்கதான். அந்த வரிசையில...... மணியும் ஒருவன்தானம்மா'

யாருக்குமே கேட்காமல் அவரது இதயம் பேசியது..... உண்மையிலேயே அவரது கண்கள் ஆனந்தமாகக் கரைந்து வடிகின்றது. அந்த அமைதியே உருவான நிலையைக் கண்டு அவளது கண்களும் பனித்துக் கரைகின்றது.

(யாவும் கற்பனையே)

# பேனா

மூதூர் ஜெயராஜ்

உழைப்பென்ற மைகொண்டு
உறங்காமல் எழுதுகின்ற பேனா - இது
உயிருள்ள மனிதர்களை
உருவாக்கித் தரப்போகும் பேனா
இனவர்க்க பேதங்கள்
கூடாது என்கின்ற பேனா - மண்ணில்
இனியெங்குங் கூடாது
போரென்றுஅழுகின்ற பேனா

அழியாத உலகுக்கோர்
அறிமுகத்தைத் தரப்போகும் பேனா - இது
அறமென்ற சொல்லுக்குப்
புது அர்த்தம் வடிக்கின்ற பேனா
தீண்டாத வர்தம்மைத்
தினந்தீண்டி மகிழ்கின்ற பேனா - இது
தீமைகள் தமைத்தீண்டித்
தீயாக அழிக்கின்ற பேனா

வற்றாது நின்று தலை
வணங்காது நிமிர்கின்ற பேனா - இது
வளமான வாழ்வுக்குப்
புதுப்பாதை வரைகின்ற பேனா
கல்லாத இனந்தேடிக்
கரைசேர்க்க வருகின்ற பேனா - இது
இல்லாமை இருள் நீக்க
ஒளி கொண்டு துணைவந்த பேனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியத்தின் மேன்மையினை உணர்வோம்



எமது திரு/மட்மறை மாவட்டமானது கடந்த மாதத்தில் விவிலிய வாரத்தைக் கொண்டாடியது. விவிலிய வாரத்தின் எல்லா நிகழ்வுக்கும் அடிப்படையாக இருப்பது இறைவார்த்தை. எனவே விவிலிய வாரம் கிறிஸ்தவ வாழ்வில் இறைவாத் தையின் தாக்கத்தை அதன் கனாகனத்தை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. எனவே இந் நாட்களில் நாம் விவிலியத்தின் மகிமையை அதன் புனிதத் தன்மையை, மேன்மையை, மகத்துவத்தை அறிய முயல்வது சாலச் சிறந்ததாகும்.

உலகிலேயே மிகவும் புகழ் பெற்ற நூல், முதன் முதலிலே அச் சேறிய நூல், அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் ..... என பல்வேறு பெருமைகளுக்குரிய ஒரே ஒரு நூல் விவிலியமாகும். திருச்சபையானது தொடக் கத்திலிருந்தே இந் நூலை மிகப் புனிதமாகக் கருதி, உயிருக்கு மேலாக மதித்து, விசுவா சத்தின் ஆணி வேரோகப் பாதுகாத்து வருகின்றது. ஆலயங்களிலே திருவெளிபாட்டின் போது தூபம் காட்டிப் முத்தம் செய்து, தகுந்த ஆயந்தங்களுடன் அதை வாசித்து பரிசுத்தமாக, பாதுகாத்து வருகின்றது. இவையனைத்திற்கும் முக்கிய காரணம் இது இறைவன் தந்த நூல், இறைவனது வாழ்வளிக்கும் வார்த்தைகளை கொண்டுள்ள நூல் என்பதேயாகும். விவிலியத்தின் புனிதத் தன்மைக்கு ஆதிக் கிறிஸ்தவர்கள் இரத்தம் சிந்தி சான்று பகர்ந்துள்ளார்கள். விவிலியத்தைச் சமய பகைவர்களிடம் கையளிப்பதை விட தங்களையே விலங்குகளுக்கு உணவாகக் கையளித்தார்கள்.

இத்தனை சிறப்பு வாய்ந்த விவிலியம் புனிதமானதாகும் அது தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது. மனிதரைத் துணை ஆசிரியராகவும் இறைவனை மூல ஆசிரியரகவும் கொண்டது. திருந்தந்தை 13ம் சிங்கராயர் விவிலியத்தின் புனிதத் தன்மை பற்றி இப்படிக் கூறுகிறார். 'பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட விவிலிய மானது இறைவனையே ஆசிரியராகக் கொண்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் மனிதரை எழுது கருவிகளாகப் பயன்படுத்தினார். அவர்கள் இறை வெளிப்பாடுகளைச் சரியான படி அறிந்து பிரமாணிக்கமாய் வழுவா உண்மையோடு அவற்றை எழுதுவதற்கு அவர்களுக்கு உதவினார்'. 'இறைவாக்கானது ஒரு போதும் மனிதருடைய மனதால் உண்டானதல்ல. மாறாக இறைவனது மக்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள்' (2பேதுறு 1/ 21) எனவே விவிலியம் ஒரு புனித நூல் என்பது புலனாகிறது.

புனிதமான இவ் விவிலியத்தினூடாக தொடர்பை, இறைவனின் வெளிப்பாடுகளை, அவர் மனிதரோடு கொண்டுள்ள உறவை, அவரது பராமரிப்பை காண்கின்றோம் இந்த விவிலியத்தின் சந்தி அளப்பெரியதாகும் திருத்தூதரான புனித பவுல் இதன் சக்தி பற்றி பின்வருமாறு கூறுகிறார். 'கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. இரு பக்கமும் வெட்டக் கூடிய வாளினும் கூர்மையானது. ஆன்மாவின் உள்ளாழத்தையும் ஆவியின் உள்ளாழத்தையும் ஊடுருவுகின்றது. மூட்டு, முளை வரை எட்டுகிறது. உள்ளத்தின் கருத்துக்களையும் எண் ணங்களையும் சீர்தூக்கி பார்க்கிறது (எபிரேயர் 4/12)

இறைவாக்கினர் எசாயா விவிலியத்தின் சக்தி பற்றி இப்படி கூறுகிறார். 'மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றது. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பு வரச் செய்து விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவும் கொடுக்காமல் திரும்பிச் செல்வ தில்லை (எசாயா 55/10-11) 'புல் உலர்ந்து போகும் பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதங்கி விடும், நம் இறைவனது வார்த் தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்' (எசாயா 40) இறை வாக்கினர் எசேக்கியேல் இறைவார்த்தையை 'தேனினும் இனியது' என்று கூறுகிறார்.

இவ்வாறாக அளப்பரிய சக்தி மிக்க இறைவார்த்தையானது மனிதரை புனிதராக்க வல்லது. ஒவ்வொரு புனிதர்களினதும் உருவாக்கத்திற்கும் காரணம் இந்த இறை வார்த்தையே. அன்று இறைவாக்கினர், நீதிபதிகள், குல முதுவர்கள் வாயிலாக பேசிய இறைவன் இன்று தமது தூய வார்த்தையின் வழியாக நம்மோடு பேசுகிறார். வேதனைகள், சோதனைகள், விரக்தி, தனிமை, துன்பம் இவைகள் மத்தியில் வாழும் எமக்கு உற்ற துணையாக, நல்ல நண்பனாக நல் வழி காட்டியாக இருப்பது இறைவார்த்தையே ஆகும்

விவிலிய வல்லுனரான புனித ஜெரோம் கூறுகின்றார்: 'விவிலியத்தை அறியாதவன் கிறிஸ் துவை அறியாதவன் 'என்று. எனவே நாம் இறை வனை அறிய அவரைச் சந்திக்க, அவரோடு உறவாட, உரையாட அவரில் என்றும் இணைந் திருக்க, நாம் மனம் மாற இறைவார்த்தையை நாட வேண்டும் குறிப்பாக விவிலிய வாரத்தில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவாக்கு பணியின் பங்காளிகளாக நாம் மாறு வோமாக.●

தொகுப்பு : S. **லோகன்** C.Y.A.
புனித அருளானந்தர் ஆலயம்
கல்லாறு.

## மரண தண்டனை வேண்டாம்

மரணதண்டனை என்பது மனித வாழ் வுக்கான மதிப்பைக் குறைத்து மதிப்பிடுவது மட்டுமல்ல கொலைமூலம் கொலை ஈடு செய்யப்படலாம் என்ற தப்பான எண்ணத்தையும் கொடுக்கின்றது என்றார், அமெரிக்கக் கருதி னால் தியடோர் மெக்காரே. அமெரிக்க ஐக் கிய நாட்டில் அண்மையில் குறைந்த பட்சம் நூறு பேருக்கு மரண தண்டனை நீக்கப் பட்டது பற்றி தனது மகிழ்ச்சியை வெளியிட் டுள்ள கர்தினால் மெக்காரி, மரண தண்ட னைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல அடையாளம் என்றார். மரண தண்டனைச் சட்டம் நீக்கப்படுவதன் மூலம் குற்றமற்றவர்கள் தவறுதலாக சட்டமூலம் கொல்லப்படும் நிலை தவிர்க்கப்படும் என்ற பலரின் கருத்துக்கு தன் ஆதரவையும் வெளி யிட்டுள்ளார் கருதினால். அமெரிக்க ஐக்கிய நாட்டில் மரண தண்டனைச் சட்டம் ஏன் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு நூற்றியொரு காரணங்களையும் முன்வைத்துள்ளார்.

## அமைதிப் பணிக்காக விருது

'த பாஸ்ற்-டு பீஸ்' என்னும் அமைதி அமைப்பின் இவ்வாண்டுக்கான விருது பல் கேரியப் பிரதமருக்கு வழங்கப்படுவதாக ஐ. நாவிற்கான திருப்பீடத்தின் நிரந்தர பார்வை யாளர் அறிவித்தார். ஐ. நாவிலான திருப் பீடத்தின் பணிகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வை யாளர் பேராயர் லெனார்டோ மார்ட்டினோ வால் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு பல்கேரி யாவின் பிரதமர் சிமியோன் சன்செ கோபூர் கோத்தாவிற்கு இவ்வாண்டுக்கான விருதை வழங்குவதாக அறிவித்துள்ளது. பல்கேரிய மக்களின் முன்னேற்றத்துக்காகவும் உலக அமைதிக்காகவும் உழைத்ததற்காக இவ் விருது அவருக்கு வழங்கப்படுகிறது. ஜுன் 19ம் திகதி ஐ. நாவின் திருப்பீட அலுவல கத்தில் இவ்விருது பல்கேரியப் பிரதமருக்கு வழங்கப்படும். ஏற்கனவே இவ்விருது கடந்த காலங்களில் பிலிப்பைன்சின் கொரோசின் ஐக்கினோ, போலந்தின் லேக்வலேசா,ஐ. நாவின் கோபி அனான் ஆகியோருக்கு வழங் கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம்

கிறீஸ்தவத் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு நோக்கம் உண்டு. அதனை தனிநாயக அடிகள் இரண்டே அடிகளில் அழகாகக் கூறுகிறார்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தான்

தன்னை நன்றாய்த் தமிழ் செய்யு மாறே.

அண்டிரிக், தத்துவபோதகர், வீரமா முனிவர் போன்றோரைத் தொடர்ந்து கிறீஸ் தவக் கம்பன் எ. ஆ. கிருட்டினப்பிள்ளை, கிறீஸ்தவ மாணிக்கவாசகர் வேதநாயக சாஸ்திரிகள், தமிழின் முதல் நாவல் ஆசிரியர் களான மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை, மாதவய்யா போன்றோர் தமிழ்க் கிறீஸ்தவ இலக்கியத்தை வளர்த்தவர்கள், இன்றும் பலர் கதை, கவிதை, நாடகம் என்று முத்தமிழிலும் கிறீஸ்தவ இலக்கியத்தை வளர்த்துக் கொண் டிருக்கிறார்கள்.

மொழியியல், மொழி பெயர்ப்பியல், இலக்கணவியல், அகராதியியல் ஆகிய வற்றில் கிறீஸ்தவர் ஆற்றிய பணிகளைத் தொகுத்து சென்னைப் பல்கலைக் கழகம் 'தமிழியல்' நூலாக வெளியிட்டிருக்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 'கிறீஸ்தவமும் தமிழும்' (முனைவர் சூ. இன்னாசி 1990) என்ற நூலிலும் கிறீஸ்தவர்களின் இலக்கியப் பணியைக் காணலாம். 'கிறீஸ்தவ அறிஞர்களின் இலக்கணப் பணி' (முனைவர் வை. சண் முகம் 1993) என்ற நூலையும் உலகத் தமிழாராச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகம் வெளி யிட்டுள்ள 'சிறுகதைச் செல்வம்' (முனைவர் சூ. இன்னாசி அ. டே னியல் 1993) 'புதினப் படைப்புக்கள்' (முனைவர் சூ இன்னாசி வி. ஆனந்தமூர்த்தி 1990) 'கவிதைச் செல்வம்' (முனைவர் சூ இன்னாசி 1989)'கிறீஸ்தவ நாடக இலக்கியம்' (முனைவர் சூ இன்னாசி, பெ. கோவிந்தசாமி 1988) ஆகிய நூற்கள் இன்றைய கிறீஸ்தவ எழுத்தாளர்களின் இலக் கியப் பணிகளை எடுத்துரைக்கின்றன.

சி.டி. வேலுப்பிள்ளை எழுதிய 'இலங் கையில் அமெரிக்க மிசன்' (வட்டுக் கோட்டை 1984) சா. ஞானப்பிரகாசம், அடிகள், மா. பாவிலுப்பிள்ளை அடிகள் ஆகியோர் எழுதிய ' யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச் சபை' (யாழ் கத்தோலிக்க இலக்கியச் சங்கம், 1986) பேராசிரியர் ஆர். லயனோவ் எழுதிய 'படைப்பிலக்கியப் பணியில் கிறீ ஸ்தவ எழுத்தாளர்களின் பங்கு', பேராசி ரியர் கா.சிவத்தம்பி எழுதிய 'ஈழத்தில் தமிழ்க் கத்தோலிக்கப் பாரம்பரியம்', பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய 'கிறீஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி' (யாழ்ப் பாணம் 1986) ஆகிய நூற்கள் தமிழ் ஈழத்தில் கிறீஸ்தவர் ஆற்றிய இலக்கியப் பணிகளை எடுத்துக் காட்டுகின்றன.

*– நன்றி –*

**தமிழ்க் கிறீஸ்தவ இதழ்கள்**
**ஓர் ஆய்வு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் வேண்டுமா?

(அரசியல் பக்கம்)

# நீதி வேண்டும்!

சமாதான யாத்திரைகள், சமாதானக் களியாட்ட நிகழ்வுகள், இன ஐக்கிய விழாக்கள், சமாதானப் பிரசு ரங்கள், சமாதானப் பாடல்கள், என்று எங்கும் சமாதானம் என்பதே பேச்சு, அதுவே அனைவரதும் மூச்சாகிவிட்டது போல் ஒரு தோற்றப்பாடு. நமது மக்களின் சமாதானத் தாகம் எத்தகையது என்பது பொங்கி வழியும் குதூகலத்தி லிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

வீதித்தடைகள் அகற்றப்பட்டன, பாதைகள் திறக் கப்பட்டன, சுற்றிவளைப்புகள் நின்றன, துப்பாக்கி ஓசைகள் ஓய்ந்தன, கைதுகள் குறைந்தன. இவை எல்லாம் இருண்ட போர்க்காலத்திலிருந்து சமாதான ஒளியைத்தேடி ஏற்பட்ட நம்பிக்கை யூட்டும் நகர்வுகள்தான். ஆனால் இவை சமா தானம் அல்ல, இதற்காகத் தமிழ் மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்கவுமில்லை. போராட்டத்தினால் ஏற்பட்ட பக்க விளைவுகளே இவை; அன்றாட வாழ்வில் ஏற்றப்பட்ட சுமைகள் அவை. சுமைகள் குறைந்தாலே போதும், வேறென்ன வேண்டும் என்ற மனநிலை உருவாகிவிட்டது. விழிப்போடு இருப்பது போராடி விழுப்புண் சுமந்த ஓர் இனத்துக்கு அவசியமாகும்.

தமிழ் மக்கள் அரிசியும் பருப்பும் கேட்டுப் போராடி யவர்கள் அன்று; தமது அடிப்படை உரிமைகள் மறுக்கப் பட்டமைக்காக தமது இனத்துவ அடையாளங்கள் அழிக்கப்பட்டமைக்காக, தமது பாரம்பரிய வாழ்விடங்கள் பறிக்கப்பட்டமைக்காக, சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காகப் பேரினவாதிகளால் தமது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டமைக்காக; சுருக்கமாகச் சொல்லப் போனால் தாம் இந்த நாட்டில் உரிமையும் கௌரவமும் உள்ள குடிமக்களாக வாழ் வதற்காகவே போராடினார்கள். தனிநாட்டுக் கோரிக்கை என்பது இப்போராட்ட வரலாற்றில் ஒரு காலகட்டத்தில் எடுக்கப்பட்ட வளர்ச்சியடைந்த நிலைப் பாடாகும். அது தேவையா தேவையற்றதா என்பதை காலந் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் பாதுகாப்போடும், கௌர வத்தோடும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்ட சகல ஜனநாயக உரிமைகளோடும் வாழ்கின்ற இலட்சியத்தை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுத்துவிட முடியாது சமாதான ஆரவாரங்களும் மயக்கங்களும் அடிப்படை இலட்சியத்திலிருந்து நமது சிந்தனைகளை மழுங் கடித்து விடாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அத்தகைய ஒரு திசைதிருப்புதலையே சமாதா னத்தை முன்னெடுக்கும் ராஜ தந்திரிகள் எதிர்பார்க்கின்றனர். 'சமாதானம் வேண்டாம் சண் டையே வேண்டும் என்று ஓல மிடும் சிவப்புச் சட்டைக்காரர்களையும், சில மஞ்சள் அங்கிக் காரர்களையும் விட சமாதான முகம் கொண்ட தந்திரிகளே ஆபத்தானவர்கள். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் இந்தச் சதிகாரர்களிடமிருந்து தமிழ் மக்கள் எச்சரிக்கையோடு தம்மைக் காத்துக் கொள்ளவேண்டும்.

இன்றைய சந்தைப் பொருளாதார அமைப்பில் 'சமாதானமும்' வர்த்தக நலனோடு தான் பார்க்கப்படு கிறது; இலாபங்கள் கணக்கெடுக்கப் படுகின்றன. இந்த வியாபாரிகளுக்குச் சமாதானம் தேவை வியாபாரம் செய்வ தற்காகவே, 'நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் கசிவது போல்' வியாபாரத்துக்குத் தேவைப்படும் சமாதானம் அன் றாடச் சுமைகள் என்னும் புல்லுக்கும் கசிந்து சிறிது ஆசுவா சப்படுத்துகிறது. இது அடிப்படை உரிமை களைப் பாது காக்குமா? அரசியல்வாதிகளின் நாளுக்கொரு பேச்சும், படையினரின் சீண்டும் நடவடிக்கைகளும், இனப்பிர ச்சினைக்கான தீர்வில் முதல் அடியாக வைக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் காணப்படும் புரிந்துணர்வில்லாத இழுபறிகளும் நிலையான சமாதானம் பற்றிய ஐயப் பாட்டையே மக்களிடம் ஏற்ப டுத்துவதாக உள்ளது.

இன்று நாம் குரல் கொடுக்க வேண்டியது சமா தானத்துக்காக அன்று (அது எல்லோரும் போட்டுக் கொள்ளும் முகமூடியாகிவிட்டது) நீதிக்காக. சமாதானத் துக்காக யாத்திரைகள் செல்லும் தென்னிலங்கைத் தலை வர்களும் வடக்குக் கிழக்கு முகவர்களும் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கட்டும், அவர்களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதி களுக்கு எதிராகக் குரல் கொடுக்கட்டும். தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் இவை என்று வாதிடட்டும் தமிழ் மக்கள் இந்நாட்டின் உரிமையுள்ள குடிமக்கள் அவர்கள் யாருக்கும் இரண்டாம் பட்சமானவர்கள் அல்ல என்பதை வற்புறுத்தப்பட்டும், நீதிக்காக வாதாடுங்கள்! வற்புறுத்துங்கள்! ஒன்று சேர்ந்து உரத்துக் குரல் கொடு ங்கள், சமாதானம் தானே பிறக்கும், அதற்காக யாரும் கூத்தாட வேண்டியதில்லை.

- மலர் வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின்
# 1ம் வருட நினைவஞ்சலி

என் ஆண்டவரே! என் கடவுளே!
என் உயிர் உம்மீது தாகங்கொண்டுள்ளது

அன்னை மடியில்
01 - 01 - 1984



ஆண்டவன் அடியில்
11 - 06 - 2001

## செல்வன் ஜேஸ்ராஜ் நெட்டோ

(மட்/புனித மிக்கோல் கல்லூரி மாணவன்)

"ஜெப ஆவி ஊற்றுமையா....
என்ற பாடலுண்டு
ஜெப தாகத்தால்
என்று உள்ளம் உருகி
பாடும் பக்தனின் பாடலிது
இந்த வரிசையில்
அமரராகிய சிறுமலர்
யேசுராஜ் நெட்டோவும் ஒருவர்
அவர் இறந்தாலும்
அவரது ஜெபங்கள்
ஒலி நாடாவில் ஓடிக்கொண்
தொனிக்கின்றன

குழந்தை யேசுவிடம் செபம்,
வேதனைகளை ஒப்புக் கொடுத்த செபம்
பெற்றோருக்கான செபம்
குருக்களுக்கான செபம் இப்படியாக
அவர் செபங்கள்
ஒலி நாடாவில் தொடர்கின்றன.
உயிரோடு இருக்கும்போது
நோயால் பாதிக்கப்பட்ட வேளையிலும்
இறை நம்பிக்கையில் தளராத
இந்த சிறுமலர் யேசுராஜ்
யாருக்கும் தெரியாமல் ஒலிப்பதிவு செய்த
செபங்கள்
அவரை செபவீரனாக
சித்தரித்துக் காட்டுகிறது.
**அவர் இன்று புனிதர்களோடு சேர்ந்து**
**இறைவனை, தூயவர், தூயவர் என**
**புகழ்பாடிக் கொண்டிருப்பார் என நம்புகிறோம்**
**அதுவே எமது பிரார்த்தனையாகும்.**

**பிரிவால் வாடும்** - W.T. நெட்டோ (தந்தை), சிசிலியா (அன்னை)

524/2, பெரிய ஊரணி
**திருமலை வீதி, மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப்போட்டி !

பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி 30. 07.2002

**விவிலியம் கற்போம் - 18**

## யாக்கோபு குடும்பத்துடன் எகிப்துக்குச் செல்லுதல்

(தொடக்கநூல் 46: 1-34)

### பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக

யாக்கோபு புத்துயிர் பெற்றவராக ...................... சென்றடைந்து, அவ்விடத்தில் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக்கொடுத்தார். அன்றிரவு கடவுள் அவருக்குக் காட்சியளித்து, 'எகிப்திற்குச் செல்ல நீ அஞ்சவேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக ................. செய்வேன். நானும் உன்னோடு ............... வருவேன். யோசேப்பு ........... உன் கண்களை மூடுவான்' என்றார். யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். அவருடைய புதல்வர்கள் தமது பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்கு .......................... அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக்கொண்டனர், நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு, மாடுகளையும் ................ சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு யாக்கோபு இவ்வாறு தம்வழி மரபினர் அனைவரோடும் எகிப்திற்குப் போனார். கோசேன் பகுதியில் ................... தம்மை வந்து சந்திக்குமாறு யூதாவை தமக்கு முன் அனுப்பியிருந்தார். அதன்படி யோசேப்பு தமது தேரைப் பூட்டிக்கொண்டு தந்தையைச் சந்திக்கச் சென்றார். அவரைக் கண்டவுடன் அவர் தோளில் சாய்ந்துகொண்டு .................... அழுதார். அப்போது யாக்கோபு, 'இப்பொழுது நான் சாகத் தயார். நீ உயிரோடுதான் இருக்கிறாய்! உன் முகத்தைக் ........... கண்டுவிட்டேன்! என்றார். பின்னர் யோசேப்பு, 'நான் பார்வோனிடம் போய், 'கானான் நாட்டிலிருந்து என் சகோதரரும் தந்தையும் குடும்பத்தாரும் என்னிடம் வந்திருக்கிறார்கள்' என்று அவருக்குத் தெரிவிப்பேன். பார்வோன் உங்களை அழைத்து, 'உங்கள் தொழில் என்ன? என்று கேட்கும்போது நீங்கள் மறுமொழியாக 'எங்கள் சிறுவயது முதல் இந்நாள் வரை மேய்ப்பர்களாக இருக்கிறோம்' என்று சொல்லுங்கள், நீங்கள் கோசேன் பகுதியில் குடியிருக்கும்படி அனுமதிக்கப்படுவீர்கள்' என்றார்.

விடைகள் :- எகிப்திற்கு/ கண்ணாரக்/ பெயேர்செபாவை/ வளரச்/ யோசேப்பு/ வெகுநேரம்/ தன்கையாலே/ பார்வோன்/ கானான்/ சொத்துக்களையும்

முகவரி : விவிலியம் கற்போம்/அறிவை வளப்போம் - 18

தொண்டன் அ.பெ. எண். 44,

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30. 07. 2002

# பரிசுப்போட்டி!

## அறிவை வளர்ப்போம் - 18

(பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)

1) திருக்குறளில் ஓர் அதிகாரத்தில் உள்ள குறள்கள்
(12, 10, 09)

2) புறாவுக்குத் தன் தசையை அரிந்து கொடுத்தவன்
(சிபிச் சக்கரவர்த்தி, பாரி, கர்ணன்)

3) இலங்கையில் முதன் முதல் தோன்றிய அரசியல் கட்சி
(ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜிக் கட்சி)

4) எதிரியுடன் சண்டையிடும் போது எதிரியின் வலிமையில் பாதியைத் தனதாக்கிக் கொள்ளும் இதிகாச வீரன்
(அனுமான், வாலி, இராவணன்,)

5) இலங்கை கிரிக்கட் அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர்
(சனத்ஜெயசூரிய, வட்மோர், அர்ஜுனா ரணதுங்க)

6) பழந்தமிழ் நாட்டில் புலிக்கொடியைக் கொண்டிருந்த நாடு
(சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

(வினாப் படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும்.
வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம் கற்போம் 16 விடைகள்

பென்யமின், என்ன, குறிபார்ப்பதில், மாசின்மையை, கோப்பை, முறையற்ற, எவனிடம், பணியாளர்கள், என்னைவிட்டு, யோசேப்பு,

# அறிவை வளர்ப்போம் 16 விடைகள்

1. சுவாமி விபுலானந்தர், 2. ஜோர்ஜ் W. புஷ், 3. சினம், 4. சிவாஜி கணேசன், 5. சச்சின், 6. ஜனாதிபதி

**இரு போட்டிகளுக்கும் சரியான விடைகளை அளித்து**

**100/- பரிசு பெறுவோர்**

1) ர. லெ. ராஜ்கிரன்
16 கோணர் வீதி
மட்டக்களப்பு

2) B. ஹிமாலி
கிட்டங்கி வீதி
மணற்சேனை
கல்முனை.

**ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடை அளித்து**

**50/- பரிசு பெறுவோர்**

1) Y. J. ஜெரிசாந்
28/2 அதிகார் வீதி
மட்டக்களப்பு

2) கிறிஷான் பாத்லட்
பிரதான வீதி
கறுவாக் கேணி
வாழைச்சேனை

**பாராட்டுப் பெறுவோர்**

டிலானி கிருபைராஜா
இல 1.1/44 8ம் குறுக்கு
கூளாவடி, மட்டக்களப்பு

D. டெய்சி வில்மோ
தாழங்குடா - 3
ஆரையம்பதி

போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றி (ஆ.ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்

## இலங்கை வானொலியில் கத்தோலிக்க தமிழ் நிகழ்ச்சிகள்

## ஜூன் - ஜூலை, 2002

நாள் : 29, 30, 1, 2
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர்: மெற்றில்டா இராஜேந்திரம்

நாள் : 3, 4, 5
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் : அருட்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ்

நாள் : 07
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 09
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்
திருமறை வினாவிடைப் போட்டி

நாள் : 13, 14, 15, 16
நேரம் காலை: 5.45 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் : அருட்தந்தை நவாஜி

நாள் : 21
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்

நாள் : 23
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்

நாள் : 27, 28, 29, 30, 31
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை

நிகழ்சித் தொகுப்பு - மலர்வேந்தன்

தொடர்பு -

சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Desiging - St. Josep's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org